# இந்தியத் துணைத்தூதரகம்
# யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

## இந்தியாவில் இளமாணி, முதுமாணி மற்றும் ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசிலும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான புலமைப்பரிசிலும் வழங்கல்.

இந்திய அரசு இந்தியாவின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் கற்பதற்குத் தகுதியான இலங்கை மாணவர்களுக்கு 290 புலமைப்பரிசில்களை வருடாந்தம் வழங்குகிறது. இதில் இளமாணி, முதுமாணி மற்றும் ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசிலும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான புலமைப்பரிசிலும் பின்வரும் விதத்தில் அடங்கும்.

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| • நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் / கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப்பரிசில் | - | 120 |
| • ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் | - | 25 |
| • பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்துசமுத்திர சுற்றுவட்ட (IOR-ARC) புலமைப்பரிசில் | - | 02 |
| • பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டம் (கலாநிதிப்பட்ட ஆய்வு) | - | 05 |
| • சார்க் புலமைப்பரிசில் (கலாநிதிப்பட்ட ஆய்வு) | - | 03 |
| • மௌலானா ஆஸாத் புலமைப்பரிசில் திட்டம் | - | 50 |

2. இவ்வருடத்துக்கான புலமைப்பரிசில் வழங்கலில் வட மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 24 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இந்த 24 பேரில் 13 பேர் ( 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள்) 3 வருட கலாநிதிப்பட்ட(Phd) ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொதுநலவாய மற்றும் சார்க்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 7 கலாநிதிப்பட்ட(Phd) ஆய்வு இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவற்றில் எல்லாமே வட மாகாணத்தவர்களுக்கே ஒதுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

3. இந்திய அரசானது இந்தப்புலமைப்பரிசில்களை திறமை அடிப்படையில் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்குகிறது. இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் மேற்படி தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. அனைத்துப் புலமைப்பரிசில்களும் மாதாந்த செலவினக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக பாடநெறியின் காலப்பகுதி முழுமைக்குமான கல்விக்கட்டணத்தையும் உள்ளடக்குகின்றன. அத்துடன் தங்குமிடக் கொடுப்பனவு மற்றும் புத்தகங்கள், காகிதாதிகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவையும் வழங்குகிறது. தவிரவும், கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப்பரிசில் பெற்றவர்கள் அனைவருக்கும் முழுமையான சுகாதார வசதி, இலங்கையிலிருந்து செல்லும் போது இந்தியாவில் மிகக்கிட்டிய விமான நிலையத்துக்கான விமானப் பயணக் கொடுப்பனவு, இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கான கல்விச் சுற்றுலாக் கொடுப்பனவுடன் மேலும் பல உதிரிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

04/07/2013
*யாழ்ப்பாணம்*